[1981 ஆகஸ்ட் 31

தூத்துக்குடி நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 112—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தூத்துக்குடி நகரத்தில் பாதாள சாக்கடை திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

(ஆ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1982 ஆம் வருட கடைசியில்.

(ஆ) ரூ. 150 இலட்சம்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு இறுதியில் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். அந்த நகரின் பெரும்பகுதியில் இந்த சாக்கடைத் திட்டத்திற்கான அடிப்படைத் தேவைகள் கூட செய்யப்பட வில்லையே? இதுபற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட நிலையில் இன்னும் ஓர் ஆண்டுக் காலத்தில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பது எந்த அளவுக்கு உண்மை ?

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நகர் பூராவும் நல்ல முறையிலே திட்டம் நிறை வேற்றப்பட வேண்டும் என்று சொன்னால், 547 இலட்சம் தேவைப்படும். அதற்கு இப்போது சாத்தியக்கூறு இல்லை என்ற காரணத்தால் 150 லட்சம் ரூபாயில் இத்திட்டத்திற்காக ஜனநெருக்கம் மிகுந்த பகுதிகளில் அதாவது கிரேஸ் காட்டன் ரோடு, பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட பரப்பு, மற்றும் பகுதி 1-ல் சில இடங்கள், அதாவது நியூ காலனி, கில்டன் புரம், இராமசாமிபுரம், பெரியார்புரம், மாசிலாமணி புரம், விரிவடைந்து வரும் சில பகுதிகள், ஆகிய இடங்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அந்த நகரம் பூராவும் கிடைக்க வேண்டும் என்று சொன்னால். 547 லட்சம் தேவைப்படும். தற்போது 150 லட்சம் ரூபாயில் திட்டத்தை தொடங்கியிருக்கிறோம். பாக்கி இடங்களை பின்னால் வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவு நீர் திட்டத்தை முறைப்படுத்தக் கூடிய பகுதியிலிருக்கிற கிராமங்களில் வெள்ளப்பட்டு என்னும் இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு கொடுத்த காம்பன்சேஷன் தொகை அதிகமாக அளிக்கப்பட வேண்டும். அதுவரையில் திட்டத்தை நிறைவேற்ற விடமாட்டோம் என்று

1981 ஆகஸ்ட் 31]

சொல்லி அவர்கள் மனு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், அந்தக் குழாய்களை போடுகிற இடத்தில் அவைகளை உடைத்து விடுகிறார்கள் என்றும அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தத் திட்டம அடுத்த ஆண்டில் நிறைவேற்றப்படும என்பது எந்த அளவுக்கு உண்மை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. அப்படி அவர் சொல்லும் தகவல்கள் உண்மையாக இருக்க வேண்டாம என்று அனைவரும் ஆண்டவனை பிரார்த்திப்போமாக. (குறுக்கீடுகள்)

சிட்டுலொட்டி, பாரைப்பட்டி கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 113—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மதுரை மாவட்டம் கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் சிட்டுலொட்டி, பாரைப்பட்டிக் கிராமங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிட்டுலொட்டி மற்றும் பாரைப்பட்டி சிற்றூர்களுக்கு குடிநீர் வசதித் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு திருப்திகரமாக இயங்கி வருகிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் சிட்டுலொட்டி, பாரைப்பட்டி கிராமங்களுக்கு சிறப்பாக குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடந்து வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த வேலைகள் இன்னும் அங்கே முறையாக செயல்பட்டு நடக்கவில்லை என்று தகவல் எங்களுக்கு கிடைத்திருக்கிறதே, அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா? ஏனென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கிடைத்திருக்கக் கூடிய தகவல் சரியாக இல்லை என்பது போல எங்களுக்கு தகவல் இருக்கிறதே, அதன் விவரங்களை ஆராய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு 3 எச்.பி. திறன் உள்ள மின் விசை நீரேற்று குழாய் மூலம் பாரைப்பட்டி, சிட்டுலொட்டி போன்ற சிற்றூர்களுக்கு 11 புதுக் குழாய்களை வைத்து குடிதண்ணீர் வழங்கப்படுகிறது என்கிற தகவல் என்னிடத்தில் இருக்கிறது. அது சரியாக இல்லை, முறை சரி இல்லை என்று பொதுவாகச் சொல்லாமல், எங்கு முறையாக இல்லை, சரியாக இல்லை என்பதை விளக்கிச் சொன்னால், குறையை நிறைவு செய்வதற்கான முயற்சிகளை எடுக்கலாம்.